சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.85/2025

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு. ராஜா<br>த/பெ.திருமலையாண்டி | நாள்.02.03.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் வழக்கில் வாதி வங்கியில் கிளை மேலாளராக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். 02.09.2009 தேதியில் பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடன் விண்ணப்பம் **வா.த.சா.ஆ.1**. 02.09.2009 தேதியில் பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்த கொதுவை ஒப்பந்தம் **வா.த.சா.ஆ.2**. 02.08.2012, 02.08.2015, 10.01.2018, 10.04.2020, 10.08.2021 மற்றும் 27.06.2023 தேதியிட்ட கடன் ஒப்புகை கடிதங்கள் முறையே **வா.த.சா.ஆ.3 முதல் 8.** வங்கிக் கணக்கு வழக்கு **வா.த.சா.ஆ.9**. 16.10.2023 தேதியிட்ட பிரதிவாதிகளுக்கு எங்கள் வங்கி அனுப்பிய வழக்கு

அறிவிப்பு மற்றும் அதனை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.10.**

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை, தோன்றாத் தரப்பினர்